[1981 மார்ச் 27

பழனி தேவஸ்தானம் நடத்தும் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி

*வினா எண். 512—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி தேவஸ்தானத்தால் நடத்தப்படும் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிக்கு அரசு மானியம் வழங்கக் கோரி கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) கோரிக்கை அரசின் பரிசீலனையிலுள்ளது.

[முற்பகல் 9-30]

திரு என். பழனிவேல்: தலைவர் அவர்களே, பழனி தேவஸ் தானத்தால் நடத்தப்படுகிற இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிக்குப் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் சிரமமான நிலையில் அது இயங்கிக்கொண்டு இருக்கிறது. அங்கே பணிபுரியக்கூடிய ஊழியர்களுக்குச் சம்பளமோ மற்ற வசதிகளோ கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது என்பதை 3 ஆண்டுகளாக வற்புறுத்தி வருகின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாக மனுக் கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது நடவடிக்கை எடுக்காததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் கல்லூரியின் செலவை தாங்களே ஏற்றுக்கொண்டு நடத்தவேண்டுமென்ற முறையிலேதான் அந்தத் தேவஸ்தானம் இதை ஆரம்பித்து நடத்திக்கொண்டு வருகிறது. இப்போது அரசு பணம் வேண்டுமென்று கேட்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். இப்படித் தனிப்பட்டவர்கள் கல்லூரியை ஆரம்பிக்கவேண்டுமென்ற பழக்கத்தை அரசு கொண்டிருக்கவில்லை. அந்தக் கல்லூரி நிர்வாகத்தினர் அதை நடத்த முடியாமல் பணம் கேட்டுக்கொண்டு இருக்கின்ற காரணத்தினாலே அதைப் பக்கத்திலே இருக்கின்ற கலைக் கல்லூரியோடு சேர்த்துக் கொள்ளலாமா என்ற யோசனையை இப்போது நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரி பிரின்சிபாலோடு நானும் சென்று அமைச்சர் அவர்களை வீட்டிலே பார்த்து கோரிக்கை கொடுத்தோம். யோசித்து

1981 மார்ச் 27]

கொண்டிருப்பதாக அமைச்சர் இப்போது சொல்கிறார்கள். இந்தக் கல்லூரி சிரமமான நிலையில் இயங்கிக் கொண்டு இருக்கிறது. சீக்கிரமாக அந்தக் கலைக் கல்லூரியோடு இணைப்பதோ அல்லது அரசு மானியம் கொடுப்பதோ இரண்டில் ஒன்றை அரசாங்கம் இந்தக் கல்வியாண்டில் செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நாம் விரைவிலே முடிவு எடுக்க வேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால் பல்வேறு பிரச்சினைகளை பலபேர்கள் எழுப்புவதால் இந்தக் காரியங்களைச் செய்வதில் நாளாகிறது. விரைவிலே முடிவு எடுப்போம்,

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, மகளிர் செந்தமிழ்க் கல்லூரி இரண்டிற்கும் அரசு மானியம் இல்லை. ஆகவே அங்கேயுள்ள ஆசிரியர்களுக்கு யு.ஜி.சி. அடிப்படையில் ஊதியம் கிடைப்பதில்லை என்ற காரணத்தினாலே அங்கே உள்ள கலைக் கல்லூரியோடு அதை இணைப்பதற்குக் கோரிக்கை வந்தால் அரசு ஆராய்வதாக அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அந்தக் கோரிக்கை வந்து இருக்கிறது. இதை அடுத்த கல்வி ஆண்டுக்குள்ளாவது அமல் நடத்தி அந்த ஆசிரியர்களுக்குச் சம ஊதியம் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. அவர்கள் பலவிதத்திலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். மறுக்கவில்லை. ஆனால், நடத்துகிறோம் என்று சொல்லி அவர்கள் ஆரம்பித்து விட்டு இப்போது பணம் இல்லை என்று அரசிடமிருந்து பணம் கேட்பதால்தான் பிரச்சினை உருவாகியிருக்கிறது. ஆகவே நாம் பரிசீலித்து இறுதியாக முடிவு எடுப்போம்.

திரு. எம். வி. இரத்தினம்: பழனியில் உள்ள இந்தக் கல்லூரியை நடத்துகின்ற பழனிகோயில் தேவஸ்தானம் அதை நடத்த முடியாததற்குக் காரணம் என்ன? கோயிலின் வருமானம் என்ன? குறைவா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் கேள்வியைத் தனியாகக் கேட்டால் தொடர்புடைய அமைச்சர் பதில் சொல்வார். அவர்கள் முதலிலே நடத்துவதாகச் சொல்லி ஆரம்பித்தார்கள். இப்போது நடத்த முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே கல்வித் துறையைப் பொறுத்த மட்டில் இது ஒரு பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது.